[திரு. எம். அப்துல் லத்தீப்] [1990 ஏப்ரல் 24

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

உறுப்பினர்களுடைய கூட்டம் ஒன்றை நம்முடைய மாநகராட்சி மன்றம் கூட்டி அவர்களுடைய ஆலோசனைகளையும் பெற்றிருக் கிறது. தற்போது உத்தேசிக்கப்பட்டுள்ள 150 வட்டங்களை யும் நாம் ஏற்றுக் கொள்வோமேயானால் ஒவ்வொரு வட்டத்திலும் ஏதோ பாதி சட்ட மன்ற உறுப்பினர் தொகுதியிலே வருகிற அளவுக்கு வாக்காளர்களுடைய எண்ணிக்கை வருகிறது என்ற காரணத்தால் ஏறக்குறைய 12,000. . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப் பினர் திரு. அப்துல் லத்தீப் அவர்களுக்கு ஒரு சிறிய் இடைவேளை. அடுத்து நீங்கள் தொடர்ந்து பேசலாம். இப்போது மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

6. அரசினர் தீர்மானம்.

பேரவை விதிகள் 36 மற்றும் 37-ஐத் தளர்த்தி விதி 95-இன் கீழ் ஒரு தீர்மானத்தை அவையில் எடுத்துக் கொள்ளுதல்.

*மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர் மானத்தை மொழிகிறேன் :

" தமிழ்நாடு சட்ட மன்றப் பேரவை விதிகள் 36, மற்றும் 37 ஆகியவற்றைத் தளர்த்தி மேற்படி விதி களில் விதி 95-ன் கீழ் ஓர் அரசினர் தீர்மானம் கொண்டு வர அனுமதி அளிக்க வேண்டும். "

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறை வேற்றப் பெற்று, அனுமதி அளிக்கப் பெற்றது.

7. அரசினர் தனித் தீர்மானம்.

காவிரி நீர்ப் பிரச்சினையை நடுவர் தீர்ப்புக்கு விட வேண்டுமென்று உச்ச நீதிமன்றத்திற்கு எடுத்துரைக்க மத்திய அரசைக் கோருதல்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மிக அவசரமாக இந்தத் தீர்மானத்தை முன்மொழிய வேண்டிய அவசியம் வந்ததற் கான காரணத்தை நான் விளக்க வேண்டியவனாக இருக்கிறேன்.

1990 ஏப்ரல் 24] [டாக்டர் மு. கருணாநிதி]

உச்ச நீதிமன்றத்தில் காவிரி நதி நீர்ப் பங்கீட்டுப் பிரச்சினையை உடனடியாக மத்திய அரசு நடுவர் தீர்ப்புக்கு விட வேண்டும் என்று தஞ்சை மாவட்ட விவசாயிகள் தொடர்ந்துள்ள வழக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இன்றைய தினம் அந்த வழக்கில் பேச்சு வார்த்தையினுடைய முடிவு என்ன என்பதை அறிந்து கொள்ள உச்ச நீதிமன்ற நீதிபதி ஆவலாக இருக்கிறார். அந்த முடிவு 24 ஆம் தேதி அன்று நடைபெறுகிற இந்த விசாரணைக்கு முன்பு தெரிய வேண்டும் என்று உச்ச நீதிமன்றம் சொன்னதன் விளைவாக டெல்லியிலே ஒரு முறை பேச்சுவார்த்தை மத்திய அரசினுடைய அமைச்சர் முன்னிலையில் தமிழகத்தின் சார்பிலும், கர்நாடகத்தின் சார்பிலும், கேரளத்தின் சார்பிலும், புதுவை மாநிலத்தின் சார்பிலும், முதலமைச்சர்களும், தொடர்புடைய அமைச்சர்களும் கலந்து கொண்டு பேச்சுவார்த்தை நடைபெற்று, டெல்லியில் பேச்சுவார்த்தை வெற்றி அடையாமல் முடிவுற்றது.

12-20 மணி

நமது கர்நாடக முதலமைச்சர் அவர்கள், தமிழக முதலமைச்சரிடத்திலே முதலமைச்சரும் நானும் சென்னையிலே கலந்து பேசி நல்ல முடிவு எடுக்கலாம் என்று சொல்லும்போது நான் கர்நாடக திட்டவட்டமாகக் கேட்டுக் கொண்டேன். அப்படி நடைபெறுவதாக இருந்தால், 24 ஆம் தேதி சுப்ரீம் கோர்ட் விசாரணை தொடங்குவதற்கு முன்பே, நடைபெற்றாக வேண்டும் என்று கூறி, அதற்காகத் தான் 19 ஆம் தேதி சென்னையில் அந்தப் பேச்சுவார்த்தைக்கு ஏற்பாடு செய்யப்பட்டு, நானும், கர்நாடக முதலமைச்சர் திரு. வீரேந்திர பட்டீல் அவர்களும் அந்தப் பேச்சுவார்த்தையை நடத்தினோம். அந்தப் பேச்சுவார்த்தை தோல்வி அடைந்திருக்கிறது. அதற்குப் பிறகு, அவர் விடுத்த அறிக்கைகளில் பேச்சுவார்த்தை தொடரலாம் என்றும், அவரே ஒரு அறிக்கையில் இனி மேல் பேச்சுவார்த்தை இல்லையென்றும முரண்பட்ட செய்திகளைச் சொல்லியிருக்கிறார். நமக்கு அதில் முரண்பாடான கருத்து இல்லை, முழுமையான கருத்து, பேச்சுவார்த்தை தோல்வி அடைந்து விட்டது என்பதுதான். கடந்த 20 ஆண்டுகளாகப் பேசிப் பேசிப் பார்த்து, எந்த விதமான ஒரு முடிவுக்கும் வர முடியாமல், 26 அல்லது 27 தடவைக்கு மேல் பேசிய பிறகும், இனியும் பேச்சுவார்த்தை தொடரலாம் என்பது காலங் கடத்துகின்ற ஒரு முயற்சியாகும். பேச்சுவார்த்தை என்கிற பெயரிலேயே, கடந்த நான்கைந்து ஆண்டுக் காலத்தில், நமக்கு அளிக்க வேண்டிய தண்ணீரின் அளவு, மிக மிகக் குறைந்து, 140 டி.எம்.சி., 150 டி.எம்.சி., என்கின்ற அளவுக்குக் குறைக்கப்பட்டு விட்டது. அவர்கள் மேலும் பேச்சுவார்த்தை என்று காலம் கடத்தினால், தமிழ்நாடு மிக மிகக் கடுமையாகப் பாதிக்கப்படும் என்ற

[டாக்டர் மு. கருணாநிதி] [1990 ஏப்ரல் 24

காரணத்தினால், இனி பேச்சுவார்த்தைக்கே இடமில்லை ; பேச்சுவார்த்தை தோல்வி அடைந்து விட்டது என்ற செய்தியை நாம் உச்ச நீதிமன்றத்திற்குச் சொல்ல வேண்டியவர்களாக இருக்கிறோம். அதைத்தான், நான் இங்கே ஒரு தீர்மானமாக முன் மொழிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தனித் தீர்மானத்தை மொழிகிறேன் :

" காவிரிப் பிரச்சினையை நடுவர் தீர்ப்புக்கு விட வேண்டுமென்று, உச்ச நீதிமன்றம், மத்திய அரசுக்கு உத்தரவிட வேண்டுமென்று, தஞ்சை விவசாயிகள் சார்பில் தொடர்ந்துள்ள வழக்கில், தமிழக அரசு தன்னையும் இணைத்துக் கொண்டிருப்பது (Implead) தெரிந்ததே. இன்று, உச்ச நீதிமன்றத்தில் அந்த வழக்கின் மீது, விசாரணை தொடர்ந்து நடக்கிறது. கடந்த 19 ஆம் தேதி, தமிழக முதலமைச்சருக்கும், கர்நாடக முதலமைச்சருக்கும் இடையே நடந்த இறுதிக் கட்டப் பேச்சுவார்த்தை தோல்வி அடைந்து விட்டது என்றும், இனி பேச்சுவார்த்தைக்கே இடமில்லை என்றும், எனவே, உச்ச நீதிமன்றம், காவிரிப் பிரச்சினையை, உடனடியாக நடுவர் தீர்ப்புக்கு விடுவதற்கு, மத்திய அரசு உத்தரவிட வேண்டுமென்றும், நமது தமிழக அரசின் சார்பில், உச்ச நீதிமன்றத்திற்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த உண்மை நிலையை, மத்திய அரசின் சார்பிலே மறைக்காமல் உச்ச நீதிமன்றத்திற்கு எடுத்து உரைக்க வேண்டுமென்றும் பேரவையின் சார்பில், தமிழக அரசு, மத்திய அரசைக் கேட்டுக் கொள்கிறது ".

இந்தத் தனித் தீர்மானத்தை அனைவரும் ஆதரித்து, நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். தலைவர் அவர்களே, உங்கள் மூலமாக.

தனித் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

மானியக் கோரிக்கைகள், 1990–91, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி.

திரு. எம். அப்துல் லத்தீப் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது உத்தேசித்துள்ள 150 வட்டங்கள் என்று ஏற்கெனவே உத்தேசிக்கப்பட்ட நிலையில் இந்தப் பிரச்சினை ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு, குறிப்பாக சென்னை மாநகரத்தில் உள்ள சட்டமன்ற உறுப்பினர்களுடைய கூட்டங்களை நடத்தி, ஒரு பொது கருத்து உருவாக்கப்பட்டது. 12 ஆயிரத்திலிருந்து 15 ஆயிரம் வாக்காளர்களுக்கு மேற்படாமல், ஒவ்வொரு வட்டமும் உருவாக்கப்பட வேண்டும்; எண்ணிக்கையைப் பற்றி கவலை இல்லை. 200-க்கும் மேற்பட்ட வட்டங்கள் ஏற்பட்டாலும், போதிய அளவுக்கு தேர்ந்தெடுக்கப்படுகிற மாநகராட்சி மன்ற உறுப்பினர், தன்னுடைய வட்டத்திலே இருக்கிற மக்களோடு நெருங்கிய தொடர்பு கொண்டும்